# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 14/ந/2026, நாள் 11.03.2026

மு.பாலாஜி,
மன்னார்குடி. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, கோபாலசமுத்திரம் மேலவீதி, எண்.23/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மு.பாலாஜி என்பவரின் 19.11.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.11.2025 அன்று பெறப்பட்டு, 14/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, கோபாலசமுத்திரம் மேலவீதி, எண்.23/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மு.பாலாஜி என்பவரின் 19.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நகராட்சி பதிவின்படி வார்டு 1, பிளாக் 23, நகர அளவை எண்.1546/2 என்பது அரசு பொதுவழிப்பாதை (Government Pathway) ஆகும். இருப்பினும் அந்த இடத்தில் திருமதி. செந்தாமரை அவர்கள் இத்தலத்தில் AC sheet கட்டிடத்தை அமைத்து எந்த ஒரு அனுமதியும் இன்றி வணிக பெட்டிக்கடை நடத்தி வருகிறார். இது பொது வழிப்பாதைக்கு நேரிடையாக ஏற்பட்டுள்ள சட்டவிரோத ஆக்கிரமிப்பு ஆகும். இந்த ஆக்கிரமிப்பு அகற்றுவதற்காக 25.02.2025 அன்று நான் நகராட்சி ஆணையருக்கு எழுத்து மனு அளித்திருந்தேன். அதன் பின்னர் நகராட்சி மற்றும் மின்வாரியத்திடமிருந்து கிடைத்த RTI பதில்கள் பதிவுகள் தவறாக மாற்றப்பட்டு, இந்த சட்டவிரோதக் கட்டிடத்திற்கு சட்டபூர்வ தோற்றம் கொடுக்கப்பட்டிருப்பதை தெளிவுபடுத்துகின்றன. 03.06.2025 அன்று நகராட்சியிலிருந்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது, நடவடிக்கையில் உள்ளது என்ற பொதுவான பதிலே கிடைத்தது. 11.06.2025 அன்று மின்வாரியத்திடமிருந்து கிடைத்த RTI–யில் EB Service No.583-001-1122 என்பது 01.08.2017 அன்று Commercial வகையில் நகராட்சி வரி ரசீது அடிப்படையில் sanction செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று, 16.06.2025 மற்றும் 11.08.2025 ஆகிய நாட்களில் Revenue பிரிவு அளித்த RTI பதில்களில், ஆரம்பத்தில் Residential ஆக இருந்த மதிப்பீடு பின்னர் commercial ஆக மாற்றப்பட்டதும், அதன் பின்னர் EB இணைப்பு

வழங்கப்பட்டதும் பதிவுகள் முறைகேடாக மாற்றப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும், நகராட்சியே 25.07.2025 அன்று Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Amended Act 35/2022) பிரிவுகள் 128 (1) (a) (b) மற்றும் 128 (2) அடிப்படையில் 15 நாட்களில் ஆக்கிரமிப்பு அகற்றுமாறு Notice வழங்கியுள்ளது. எனினும், இந்த notice இன்று வரை நடைமுறையில் அமுல்படுத்தப்படவில்லை என்பது சட்டப்பூர்வ நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளதை காட்டுகிறது. மேற்கண்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு, அரசு பொதுவழிப்பாதை என வகைபடுத்தப்பட்டுள்ள T.S.No.1546/2 பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த சட்டவிரோத வணிகக் கட்டிடத்தை உடனடியாக அகற்றுமாறு உத்தரவிடவும், தவறான வரி பதிவின் அடிப்படையில் வழங்கப்பட்ட Commercial EB Service No.583-001-1122 இணைப்பை ரத்து செய்யவும், மேலும் மன்னார்குடி நகராட்சி ஆணையர் ஆக்கிரமிப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் 25.08.2025 அன்று (ந.க.எண்.1135/2025/அ4) வழங்கிய ஆணையில், T.S. No.1546/2 பகுதியில் ஏற்பட்டுள்ள தனிநபர் ஆக்கிரமிப்பை "விதிகள்படி தக்க நடவடிக்கை மேற்கொண்டு, 15 தினங்களுக்குள் மனுதாரருக்கும், அலுவலகத்திற்கும் அறிவிக்க" என்று நேரடியாக உத்தரவிட்டுள்ளார். இந்த உயர்நிலை அதிகார உத்தரவுடனும் மன்னார்குடி நகராட்சி ஆணையர் இதுவரை எந்தவித அகற்றும் நடவடிக்கையையும் மேற்கொள்ளாதது, நகராட்சியின் நோக்கமுள்ள தாமதத்தையும், சட்டபூர்வ கடமையின்மையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. மேலும், எனது மனுவைத் தொடர்ந்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் 16.10.2025 அன்று (கடித எண்.192/2025/ஆ3) மன்னார்குடி நகராட்சி ஆணையரிடம் நேரிடையாக அறிவுறுத்தல் வழங்கி, T.S.No.1546/2 பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து "சட்டப்படி தேவையான நடவடிக்கை எடுக்க" உத்தரவு பிறப்பித்துள்ளார். எனினும், மாவட்ட ஆட்சியரின் இந்த அதிகாரப்பூர்வமான நேரடி அறிவுறுத்தலுக்குப் பிறகும் இன்றுவரை நகராட்சி எந்தவித அகற்றும் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதனால் எனது மனுவும், மாவட்ட ஆட்சியர் வழங்கிய ஆணையும், நகராட்சியால் நடைமுறையில் நிறைவேற்றப்படாமல் தாமதப்படுத்தப்பட்டு வருவது உறுதியாகிறது. எனவே, அரசு நிலப்பகுதியை அதன் இயல்பான பொதுவழிப்பாதை நிலையில் மீட்டெடுக்க நகராட்சியைப் பணிக்கவும் நகராட்சி மற்றும் மின்வாரிய பதிவுகள் நில வகைப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் சரி செய்யப்படுமாறு நடவடிக்கை எடுத்து, Survey No.1546/2 பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பை நகராட்சி ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் உடனடியாக அகற்றும் நடவடிக்கையைத் தொடங்கி, அந்த அகற்றும் பணிகள் 15 நாட்களுக்குள் முழுமையாக நிறைவேற்றப்பட்டதும், அதன் இறுதி செயல் அறிக்கையையும், ஆதார ஆவணங்களையும் மன்னார்குடி நகராட்சி ஆணையர் அவர்கள் மண்டல நகராட்சி இயக்குனர் (RDMA) மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நேரடியாக சமர்ப்பிக்க மன்னார்குடி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஆணையிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் மன்னார்குடி நகராட்சி ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) மன்னார்குடி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2523/2024/எப்1 நாள்.04.02.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திரு. M. பாலாஜி வீட்டினை ஒட்டி திருமதி. செந்தாமரை (தாமோதரன் மனைவி) திருமதி. மருதாம்பாள் நகராட்சி சாலையினை, கடந்த 20 வருடங்களுக்கு முன் ஆக்கிரமித்து திருமதி. செந்தாமரை என்பவர் கடையும், திருமதி. மருதாம்பாள் என்பவர் சிறிய அளவிலான குடிசை வீடும் கட்டி குடியிருந்து வருகிறார்கள்.

மன்னார்குடி நகராட்சி நகரசார் ஆய்வாளரின் 12.01.2026 நாளிட்ட குறிப்பின்படி ஆக்கிரமனதாரர்களுக்கு நகராட்சி மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம், 35/2022) பிரிவு 178 (1) (a) (b) மற்றும் 178 (2) –ன் கீழ் ஆக்ரமனங்கள் அகற்ற அறிவிப்பு நாள் 09.10.2025, 15.12.2025, 30.12.2025 வழங்கப்பட்டுள்ளது.

திருமதி.செந்தாமரை (தாமோதரரின் மனைவி) என்பவர் நகராட்சி வழங்கிய அறிவிப்பினை பெற்றுக்கொண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடியில் (வழக்கு எண். O.S. No.1/2026) வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளது. அறிவிப்பினை பெற்றுக்கொண்ட திருமதி. மருதாம்பாள் மற்றும் திரு. முருகையன் (பாலாஜி அவர்களின் தந்தை) இருவரும் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களை இதுநாள் வரை அகற்றப்படவில்லை. மேற்படி கோபாலசமுத்திரம் மேலவீதி என்பது அருள்மிகு இராஜகோபால சாமி கோவில் தேர் ஓடும் வீதியாகும். மேற்படி வீதியில் இருபுறங்களிலும் சுமார் 50 வீடுகள், வீட்டின் முன்புறம் உள்ள சாலைகளை ஆக்கிரமித்து, தற்காலிக ஏ.சி.சீட்டு கட்டிடம் மற்றும் சிறிய அளவிலான குடியிருப்பு வீடுகள் உள்ளன.

புகாரில் தெரிவித்துள்ள திருமதி.செந்தாமரை (திரு.தாமோதரன் மனைவி) அவர்களின் கடைக்கு விதிக்கப்பட்ட வீட்டு வரி புகாரின் அடிப்படையில் இந்நகராட்சியால் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் மின் இணைப்பினை துண்டிக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது மற்றும் திருமதி. மருதாம்பாள் என்பவர் 20 ஆண்டுகளாக குடியிருந்து வருவதால் மாற்று இடம் வழங்கக்கோரி ந.க.எண்.2523/2024/எப்1 நாள் 09.01.2026 வட்டாட்சியர், மன்னார்குடி அவர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி முறைமன்றத்தில் புகார் தெரிவித்துள்ள திரு. எம்.பாலாஜி அவர்களின் தந்தை திரு. முருகையன் அவர்களும் வார்டு–1, பிளாக் 23, நகரளவு எண்.1546/2ல் 37.00 ச.மீ. அளவில் ஆக்ரமனம் செய்து காம்பவுண்டு சுவர் மற்றும் கடை அமைத்து வியாபாரம் நடத்தி வருகிறார். அன்னாரும் இந்நாள் வரையில் மேற்படி ஆக்ரமனம் அகற்றவில்லை. புகாரில் தெரிவித்துள்ள நபர்கள், புகார் கூறிய நபரின் தந்தை உட்பட இந்நாள் வரை மேற்படி புல எண்.1546/2ல் உள்ள ஆக்ரமனம் அகற்றவில்லை. அருகே, அருகே இவர்களுடைய ஆக்ரமனம் உள்ளது. இவர்கள் இருவரும் மாறி, மாறி நகராட்சி அலுவலகத்திற்கு புகார் அளித்து வருகின்றனர்.

மேற்படி ஆக்ரமனம் திடீரென ஏற்படுத்தப்படவில்லை. கடந்த 20 வருடங்களாக ஆக்கிரமித்து கடை மற்றும் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். புகாரில் தெரிவித்துள்ள நபரை மட்டும் அகற்றுவதில் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதால், மேற்படி தெருவில் உள்ள மேலவீதி அனைத்து ஆக்ரமனங்களும் மற்றும் தெற்கு வீதி, வடக்கு வீதி, கீழவீதி தேரோடும் வீதியாக உள்ளதால் நகர்சார் ஆய்வாளரைக் கொண்டு அளவீடு செய்து மேற்படி கோபால சமுத்திரம் மேலவீதி மற்றும் கோவிலை சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் ஆக்ரமனங்கள் உள்ளதால் ஆக்ரமனங்களை அகற்ற நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி O.S.No.1/2026–ல் வழக்கு நிலுவையில் உள்ளதாலும், தங்களிடம் புகார் அளித்துள்ள திரு. மு. பாலாஜி மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியாக உள்ளதாலும், ஆக்ரமனத்தை அகற்ற இயலாது. மேலும் இந்நகராட்சி மூலம் நான்கு வீதிகளில் உள்ள ஆக்ரமனங்களை அகற்ற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

4. மனுதாரரின் மனு. எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மன்னார்குடி நகராட்சி வார்டு 1, பிளாக் 23, நகர அளவை எண்.1546/2 உள்ள பொதுவழிப்பாதையை திருமதி. செந்தாமரை என்பவர் ஆக்கிரமித்து அனுமதியின்றி AC sheet

கட்டிடம் அமைத்து வணிக பெட்டிகடை நடத்தி வருகிறார் என்பதும், இச்சட்டவிரோத ஆக்கிரமிப்பை அகற்ற அளிக்கப்பட்ட மனுவைத் தொடர்ந்து, மன்னார்குடி நகராட்சி ஆக்கிரமிப்பை அகற்ற அறிவிப்பு வழங்கிய நிலையில் கால அவகாசம் அளித்துள்ளது என்பதும், நகராட்சியின் வரி ரசீது கொண்டு மின்வாரியம் மின்இணைப்பு வழங்கியதாகவும், Residential ஆக இருந்த இடம் Commercial ஆக மதிப்பீடு செய்யப்பட்டதால், Commercial வகையாக மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வருவாய் பிரிவு உறுதி செய்துள்ளது என்பதும், பதிவுகள் முறைகேடாக மாற்றப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துகிறது என்பதும், மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பொதுவழிப்பாதையை மீட்டெடுக்க மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனுவிலிருந்து அறியமுடிகிறது.

மன்னார்குடி நகராட்சி, வார்டு 1, பிளாக் 23, நகர அளவை எண்.1546/2 ல் உள்ள பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் ஒருவருக்கொருவர் மாறி, மாறி புகார் அளித்து வருகின்றனர் என்பதும், மனுதாரரின் புகார்மனுவினை தொடர்ந்து திருமதி. செந்தாமரை என்பவரின் கடைக்கு விதிக்கப்பட்ட வீட்டு வரி ரத்து செய்யப்பட்டு, மின் இணைப்பு துண்டிக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அருள்மிகு இராஜகோபால சாமி கோவிலின் தேர் ஓடும் கோபாலசமுத்திரம் மேலவீதியின் இருபுறங்களிலும் சுமார் 50 வீடுகள் உள்ளதும், இந்த வீடுகளின் முன்புறம் உள்ள சாலைகளை பலர் ஆக்கிரமித்து, தற்காலிக ஏ.சி.ஷீட்டு கட்டிடம் மற்றும் சிறிய அளவிலான குடியிருப்பு வீடுகள் அமைத்துள்ளனர் என்பதும், கோபால சமுத்திரம் மேலவீதி மற்றும் கோவிலை சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் ஆக்ரமனங்கள் உள்ளதால் ஆக்ரமனங்களை அகற்ற நகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படடு வருகிறது என்பதும், மன்னார்குடி நகராட்சி நகரசார் ஆய்வாளரின் குறிப்பின்படி ஆக்கிரமனதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம், 35/2022)–ன் கீழ் ஆக்ரமனங்கள் அகற்ற 09.10.2025, 15.12.2025, 30.12.2025 நாளிட்ட அறிவிப்புகள் மன்னார்குடி நகராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதும், நகராட்சியின் அறிவிப்பைத் தொடர்ந்து திருமதி. செந்தாமரை என்பவரால் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடியில், மனுதாரரை 1ம் பிரதிவாதியாக கொண்டு (வழக்கு எண். O.S. No.1/2026) வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதும், வழக்கு நிலுவையில் உள்ளதால் ஆக்ரமனத்தை அகற்ற இயலவில்லை என்பதும் மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளப்பட்டது.

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to, --

(a) xxx xxx

any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

இந்நேர்வில், இப்புகார் மனு தொடர்பாக மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடியில் தொடரப்பட்ட வழக்கு (வழக்கு எண். O.S. No.1/2026) நிலுவையில் உள்ளதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி மனுதாரரின் கோரிக்கை குறித்து விசாரிக்க இயலாது என்பதால், இம்மனு

தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, மாாச் திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.மு.பாலாஜி,
   எண்.23/1, கோபாலசமுத்திரம் மேலவீதி,
   மன்னார்குடி,திருவாரூர் மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   மன்னார்குடி நகராட்சி, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்